REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5563

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 31உ செவ்வாய் (16—8—55) ★ ★ வெளியூர்: ஆவணி 1உ புதன் (17—8—55) [இதழ் 54

அணுசக்தி கண்காட்சியில் திருட்டு

ஜினிவா, ஆக. 15—

சமாதான காரியங்களுக்கு அணுசக்தியை உபயோகிப்பது பற்றிய விளக்கந்தரும் கண்காட்சிசாலையில் வைக்கப்பட்டிருந்த கதிரியக்க சக்தி பெற்ற 'கோபால்ட்' ஒன்று திருட்டுப்போய்விட்டதாகத் தெரிகிறது. இதர கனிப் பொருள்களுடன் வைக்கப்பட்டிருந்த அந்த 'கோபால்ட்'டை எவரேனும் வைத்திருப்பது தீங்கு பயப்பதாகும் என்று போலீசார் எச்சரித்திருக்கின்றனர். 'கோபால்ட்' ஆபத்து விளைவிக்கக்கூடிய அளவு கதிரியக்க சக்தி பெற்றதல்ல என்றாலுங்கூட, நீண்ட நேரம் ஒருவரின் பையில் இருக்குமானால், ஆபத்து விளைவிக்கக்கூடியதாகவும் அது இருக்கக்கூடுமாம்; மிகக் குறைந்த மதிப்புடைய 'மாதிரிப் பொருளா'ம் அது!

'சுதந்திர' நாட்டில் வேதனைக் குரலா?

எட்டு ஆண்டு சுதந்திர ஆட்சியில் தொழிலாளர் அவலநிலை ஏன் மாறவில்லை?

தொழிலாளர் போராட்டத்திற்கு தி. மு. கழக ஆதரவு நிச்சயம்

சென்னை பக்கிங்ஹாம், கர்னாடிக் ஆலைத் தொழிலாளரிடை என். வி. நடராசன்

"இந்தியா சுதந்திரமடைந்து எட்டு ஆண்டுகளாகின்றன; ஆவது மட்டுமல்ல—இன்று ஆண்டு விழாவும் கொண்டாடுகின்றனர்—ஆளும் வர்க்கத்தினரும் அவர்களைச் சார்ந்த மற்றவர்களும்! ஆனால், அதே சமயத்தில், இச்சுதந்திரம் கிடைப்பதற்கு யார் உற்ற துணையாகவும், மூல காரணமாகவும் அன்று தேசியப் போராட்டத்தில் பணியாற்றினரோ அத்தொழிலாளர்கள், இம்மாபெரும் கூட்டத்தில் தங்களின் வேதனைக் குரலை எழுப்புகின்றனர்; இதைவிட வெட்கக் கேடான ஒரு நிலை இன்றைய ஆட்சிபீடத்தினருக்கு வேறொன்றிருக்க முடியாது;

"சீனம் சுதந்திரமடைந்து ஐந்தாண்டுகளாகின்றன; ஆனால், அந்தச் சுதந்திரத்தில்—உழைப்பாளர்களுக்கு உயர்வு தரப்படுகிறது; உழைப்புக்கு மதிப்பளிக்கப்படுகிறது; இது, நாங்கள் கூறுவதல்ல—நாட்டு வரலாறு எடுத்துக் காட்டுவதாகும்;

"ஆனால், எட்டாண்டு நிறைவு பெற்ற இந்திய சுதந்திர ஆட்சி, உலுத்தர்களுக்கு வாழ்வளித்து, உழைப்பாளர்களைத் தாழ வைக்கிறது; இந்த அவலநிலை, பிரிட்டிஷார் இந்நாட்டை ஆண்டபோதும் இருந்தது; பாரத புத்திரர்கள் ஆளும் இன்றைய ஆட்சியிலும் அந்நிலை தலைவிரித்தாடுகிறது;

"சென்னை பக்கிங்காம் கர்னாடிக்மில் தொழிலாளர்களாகிய நீங்கள் கேட்டுள்ள மிகச் சாதாரண உரிமைகளையும் முதலாளிகள் தர மறுத்துவிட்டனர்; இனி உங்களின் கோரிக்கையை சென்னை அரசியலாருக்கு எடுத்துக் கூறி நியாயம் வழங்க வேண்டும் என்றும், இல்லையெனில், போராட்டம் நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றும் அரசியலாரிடம் தெரிவிக்கப் போவதாக அறிந்தேன்; எனவே, இக்கூட்டத்தில் தி. மு. கழகமும் கலந்து தனது கருத்தினைத் தெரிவிக்க வேண்டும் என்று சென்னை தொழிற் சங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே, பொதுச் செயலாளரின் எண்ணத்திற்கேற்ப—கழகச் சார்பில் இக்கூட்டத்தில் கலந்து கொள்கிறேன்;

"உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் கிடைக்கவேண்டும்; இதனை முதலாளிகள் சற்று மனவளத்துடன் கவனித்து விட்டுக் கொடுக்கவேண்டும்; போராட்டமின்றியே உங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதே எங்கள் எண்ணமாகும்; இதற்கு சென்னை அரசியலாரும் துணை செய்ய வேண்டும் என்று சுட்டிக்காட்டவும் விரும்புகிறோம்;

"இந்த நேர்மையான முயற்சிகளை முதலாளிகளோ, அல்லது அரசியலாரோ பொருட்படுத்தவில்லையெனில், சென்னைத் தொழிற் சங்கம் துவக்க இருக்கும் அறப்போரில் தி. மு. கழகம் தனது முழு ஆதரவைத் தரும் என்று கழகச் சார்பில் உறுதி கூறுகிறேன். இந்த உறுதி தொழிலாளர் தோழர்களுக்கு மட்டுமல்ல—ஆட்சியாளருக்கும் இதனை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்;

"தி. மு. கழகம், ஏழை—நடுத்தர மக்களுக்கு வாழ்வைத் தேடித்தரும் இயக்கமாகவே இயங்கி வருகிறது; ஆகவே, உங்கள் கோரிக்கைகள் நிறைவேற—வெற்றியுற திராவிட முன்னேற்றக் கழகம் மனமார விரும்புகிறது; தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு வேலை நிறுத்தம் நடைபெறுமானால், திராவிட முன்னேற்றக் கழகம் தனது முழு ஆதரவையும் தரும் என்பதை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்."

இவ்வாறு, 15—8—55 மாலை, சென்னை கான்ரான்ஸ்மித் நகர் திடலில் சென்னை தொழிற் சங்கத் தலைவர் திரு எஸ். சி. சி. அந்தோணிபிள்ளை தலைமையில் நடைபெற்ற பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர் பொதுக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில், தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் குறிப்பிட்டார்.

(தோழர் என். வி. நடராசன் அவர்கள் சொற்பொழிவு முடிவு பெறவில்லை; நாளை தொடர்ந்து வெளிவரும்)

வீரப் பெண்மணியின் தீரச் செயல்!

கையில் கொடி ஏந்தி மார்பில் குண்டேந்தினர்!

கோவா எல்லை, ஆக. 15—

கோவா எல்லையில் இன்று நுழைந்த ஆயிரக்கணக்கானோரில், விடுதலைக்காக உயிர் நீத்தவர்களில், பெண்மணி ஒருவரும் இடம் பெற்றிருக்கிறார். வி. டி. சித்தலே என்பவர் தலைமையில் நுழைந்த வீரர்கள் அணியில் அந்தப் பெண்மணி இருந்தார்.

எல்லைக்குள் நுழைந்ததும், போர்ச்சுகீசிய போலீசார் துப்பாக்கியைக் காட்டி, சுட்டு வீழ்த்தப்போவதாக மிரட்டியிருக்கின்றனர்.

"உடனே மேற்கு வங்கத்தைச் சேர்ந்த சுபத்ராபாய் சாகர் என்ற அந்த வீரப் பெண்மணி, படைத் தலைவரிடமிருந்த தேசியக் கொடியைத் தட்டிப் பறித்து கையிலேந்தி, வீரர்களை அழைத்துக்கொண்டு, 'உங்கள் துப்பாக்கிகளுக்கு அஞ்சமாட்டோம்' என்ற அறைகூவலுடன் எல்லைக்குள் முன்னேறியிருக்கிறார்.

துப்பாக்கிக் குண்டுகள், அவரது மார்பைத் துளைத்துவிட்டிருக்கின்றன.

இந்திய எல்லைக்குள் கொண்டு வந்து மருத்துவ உதவி தருமுன், அந்த வீரப் பெண்மணி மரணத்தை அணைத்துக் கொண்டிருக்கிறார்.

★

கோவா போர்க்களத்தில் வீரர்கள் தியாகம்

பலர் உயிர் ஈந்தனர்! மரணப்படுக்கையில் பலர்!

போர்ச்சுகீசியரின் மிருக வெறி உச்சம் பெறுகிறது!

பம்பாய், ஆக. 15—

கோவா எல்லைக்குள் இன்று ஆயிரக் கணக்கில் நுழைந்த விடுதலை வீரர்களில், போர்ச்சுகீசிய ஆதிபத்திய வெறியர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 28; துப்பாக்கிக் குண்டுகளை ஏந்தி மரணத்துடன் போரிடுவோரின் எண்ணிக்கை 44!

விடுதலை வீரர்கள் மீது போர்ச்சுகீசியப் போலீசார் தடியடி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் ஆகிய அடக்குமுறைகளையும் அளவு கடந்து ஏவிவிட்டிருக்கின்றனர்.

அமைதியான முறையில், 'போர்ச்சுகீசியரே, கோவாவைவிட்டு வெளியேறுக' என்று முழக்கமிட்டுக் கொண்டு, கோவா எல்லைக்குள், பல முனைகளிலிருந்தும் நுழைந்த விடுதலை வீரர்கள் மீது, இத்தகு அடக்குமுறை வேட்டையாடியது கேட்டு, இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதியினரும் திடுக்கிட்டுப் போயிருக்கின்றனர்.

தொடர்ந்து நடைபெறுவதாக இருந்த இந்த போராட்டத்தை, அளவு மிஞ்சிய அடக்குமுறையின் காரணமாக நிறுத்திவைத்திருப்பதாக 'கோவா விமோசன சமிதி' அறிவித்திருக்கிறது.

துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியான வீரர்களின் சடலங்கள், டெல்லிக்கு எடுத்துச் செல்லப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கோவாவிற்குள் நுழைந்த வீரர் பட்டாளமே போர்ச்சுகீசியரின் மிருக வெறிப் போக்கை உணர்ந்திருந்ததுதான் என்றாலும், ஈவு இரக்கம் ஏதுமின்றி துப்பாக்கித் துரைத்தனம் நடத்தி, எண்ணற்றோரின் உயிரைக் குடிக்கும் கல்நெஞ்சக்காரர்களாக போர்ச்சுகீசிய வெறியர்கள் இருப்பர் என்று எதிர்பார்க்கவில்லைதான்!

போர்ச்சுகீசிய ஏகாதிபத்திய வாதிகள், கோவா விடுதலை வீரர்களைக் கொன்று குவித்து, எல்லையோரப் பகுதிகளை வீரர்தம் இரத்தத்தால் சிவப்பாக்கியிருப்பதை, விடுதலை விரும்பிகள் என்றென்றைக்கும் மறக்கமாட்டார்கள்!

★

'கோவாவிற்குள் இராணுவத்தை அனுப்பமாட்டோம்!'

'சமாதான முறைகளாலேயே விடுதலை காண முயற்சிப்போம்!'

'நிராயுதபாணிகளை துப்பாக்கியால் சுடுவது நியாயமா?'

பண்டித நேரு விளக்கம்

புதுடில்லி, ஆக. 15—

"நாம் கோவா விடுதலைப் பிரச்சினைக்கு சமாதான வழிகளிலேயே பரிகாரம் தேடுவோம்; நமது இராணுவத்தை கோவா நோக்கித் திருப்புவோம் என்று எவரும் தவறாக எண்ணிக் கொண்டிருக்க வேண்டாம்.

"கோவா இந்தியாவின் ஒருபகுதி; இந்தியாவிலிருந்து கோவாவைப் பிரிக்க, உலகத்தில் எவராலும் இயலாது;

"இந்தியா விடுதலை பெற்றபிறகு, கோவா, ஒரு ஐரோப்பிய வல்லரசின் ஆதிக்கத்திலிருக்க வேண்டுமென்பது முடியாத காரியம்;

"கனவில்கூட அப்படி ஒரு நிலையை நாங்கள் காண விரும்பவில்லை;

"கோவா எல்லைக்குள் நுழையும் போராட்ட வீரர்களை நான் வாழ்த்துகிறேன்;

"உயர்ந்த இலட்சியங்களையும், கொள்கைகளையும், 'சத்தியாக்கிரகம்' உள்ளடக்கியது என்

(4-ம் பக்கம் பார்க்க.)

★

48 பேர் கைதாகி விடுதலையாயினர்

கல்கத்தா, ஆக. 15—

இங்குள்ள போர்ச்சுகீசிய சௌராஷ்டிர தூதுவராலயக் கட்டிடத்திற்குள் இந்திய தேசியக் கொடியை ஏற்ற முயன்ற, ம. சோ. கட்சியைச் சேர்ந்த 48 பேர்களை போலீசார் கைது செய்து, பின்னர் விடுதலை செய்திருக்கின்றனர்.

இரண்டு சட்டசபை உறுப்பினர்கள், மேற்கு வங்க ம. சோ. கட்சித் தலைவர், செயலாளர் ஆகியோரும் அந்த 48 பேர்களில் சிலர்.

ம. சோ. கட்சியினர் 1,000 பேருக்கு மேல் கூடி நகரின் பல பகுதிகளிலும் ஊர்வலமாக வந்து, அந்தத் தூதுவராலயத்தின்முன் கூடியிருக்கின்றனர்.

போலீசார் தூதுவராலயத்தைச் சுற்றிப் பாதுகாத்துக் கொண்டதுடன், பலரைக் கைது செய்தனராம்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 16–8–'55 செவ்வாய்

'ஆனந்த சுதந்திரம்!'

" 'ஆனந்த சுதந்திரம்' அடைந்துவிட்டோம்" என்று பள்ளுப் பாடி, பரத நாட்டிய மாடி, விழா கொண்டாடிடத் துவங்கி எட்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன; எட்டாம் ஆண்டு சுதந்திர தினம் நேற்று கொண்டாடப்பட்டு விட்டது.

வழக்கம்போல, நாட்டை ஆளும் வாய்ப்பு பெற்ற காங்கிரசார், வீதிகள் தோறும் தோரணங்கள் கட்டி, கொடி ஏற்றி, குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கி, கூட்டங்கள் போட்டு, 'சுதந்திரம்' பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தி, இசைக் கச்சேரிகள் நடத்தி விழா கொண்டாடிவிட்டனர்.

தேசீய ஏடுகளும் 'சுதந்திர' தின மலர்கள் வெளியிட்டு, மக்களுக்கு 'சுதந்திர' தினத்தை நினைவூட்டியிருக்கின்றன.

மந்திரிகளும், கவர்னர்களும், ஜனாதிபதியும் 'சுதந்திர' தினச் செய்திகள் விடுத்திருக்கின்றனர்—பத்திரிகை, வானொலிகள் மூலம்.

இத்தனை ஆர்ப்பாட்டங்களுக்கும்—சந்தடிகளுக்கும் இடையே, 'நமது வளைந்த வாழ்வு நிமிர்ந்ததா? வாடிய முகம் மலர்ந்ததா?'—என்ற கேள்விக் குறி, நாட்டு மக்களின் உள்ளத்திலே—குறிப்பாக தென்னாட்டவரிடையே எழுந்து நிற்கிறது என்பதை, ஆளவந்தார்களே மறந்து விடவோ—மறுத்துவிடவோ முடியாது.

"வாழ்விழந்து தவிக்கிறீர்கள்—வாழப்பிறந்த நீங்கள்; உங்கள் வாழ்விலே வளம் இல்லை—வறுமை இடம் பெற்றிருக்கிறது; உங்கள் உள்ளத்திலே மகிழ்ச்சி ஊற்றெடுக்கவில்லை—சோகம் பீறிட்டுப் பெருக்கெடுக்கிறது;

"எதிர்காலம் பற்றி உங்களுக்கு ஊக்கம் இல்லை; 'வாழ்வோமா?'—என்ற ஏக்கம் உங்களை வாட்டுகிறது; என்ன செய்வது? அழுது புலம்பும் நம்மை அணைத்து, ஆறுதல் அளிக்கவல்ல அன்னை பாரதமாதாவின் கரங்கள், அன்னியர் ஆதிக்கத்தால் விலங்கிடப் பட்டிருக்கின்றன; அந்தக் கரங்களுக்கு விடுதலைகிடைத்தால்—அவளது கரங்களில் பூட்டப்பட்டிருக்கும் அடிமை விலங்கு ஒடிக்கப்பட்டால், தேம்பி அழும் நம்மைத் தேற்ற, தன் நீள்கரங்களை நீட்டுவாள்; அந்த அன்னையின் அணைப்பிலே, வாழ்வு பெறுவோம்! அதற்கிலை மலர, வெள்ளையரை விரட்டுவோம்! விலங்கொடிப்போம்! விடுதலை பெறுவோம்! அதற்காக உயிரையும் தருவோம்," என்று கூறி, நாட்டு மக்களின் அவல வாழ்க்கை நிலையை அவர்களுக்குச் சுட்டிக்காட்டி, வெள்ளையருக்கு எதிராகத் திரட்டப்பட்ட படையான காங்கிரஸ்தான், இன்று, நாட்டை ஆளும் நல்வாய்ப்புப் பெற்றிருக்கிறது.

'இந்த வாய்ப்பினை எட்டாண்டுகளாக, இடையூறுகள் எதுவுமின்றி அனுபவித்துவரும் காங்கிரஸ்காரர்கள் இந்த நாட்டு மக்களின் வாழ்விலே என்ன மாற்றத்தைச் சாதித்திருக்கிறார்கள்?' என்பதைத்தான் நாட்டவர்கள் கவனித்தாக வேண்டும்.

'இந்த வையத்து நாட்டில் எல்லாம், தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு, பாழ்பட்டு நின்ற பாரத தேசம், எந்த வகையாலே இன்று வாழ்விக்கப்பட்டுவிட்டது?' என்று கேட்பவர் பலர் உண்டு, நாட்டில்! அந்தக் கேள்விக்கு விடையிறுப்பது காங்கிரஸ்காரர்களுக்கே மிகவும் கடினமான ஒன்றாகும்.

நாட்டுக்குக் கிடைத்திருப்பதாகக் கூறப்படும் 'ஆனந்த சுதந்திரம்', தென்னாட்டவருக்கு—திராவிடருக்கு என்ன நன்மையைச் செய்தது என்பதே நமது கேள்வி!

'அறம் செழித்து வளம் கொழித்த நாடு, நம் நாடு; வளத்தைப் பேணி வளர்க்கும் முறையில் வகுக்கப்பட்டது ஐந்தாண்டுத் திட்டம்,' என்று, முதன் மந்திரி காமராசர் கூறியிருக்கிறார், நேற்று!

'நம் நாடு' என்று அவர் குறிப்பிடுவது 'இந்தியாவையே' தவிர, 'திராவிடத்தை—தென்னாட்டை' அல்ல!

'இந்தியாவின் வளங்களைப் பேணி வளர்க்க ஐந்தாண்டுத் திட்டங்கள் வழி செய்கின்றனவாம்'—காமராசர் கூறியிருக்கிறார்; உண்மையாகவிருக்கலாம்; ஆனால், இந்தியா முழுமையிலுமுள்ள வளங்களைப் பேணி வளர்க்க அல்ல—ஐந்தாண்டுத் திட்டம் பயன்பட்டது; வடநாட்டு வளங்களைப் பேணவும், பெருக்கவும் பயன்பட்டது உண்மை; ஆனால், தென்னாட்டு வளத்தைப் பெருக்கக்கூட அல்ல—பேணுவதற்கே திட்டங்கள் இல்லை—என்பதை, 'ஆவடி'கள், 'பெரிய நாயக்கன் பாளையங்'கள் 'மக்கள் சபை'கள்—அவருக்கு உணர்த்தும்!

உண்மை அப்படியிருக்க, எப்படி, காமராசர் ஐந்தாண்டுத் திட்டத்தினைப் போற்றிப் புகழ்கிறாரோ?

நாட்டு மக்களின் வாழ்வுப் பிரச்சினைகள் அத்தனைக்கும் பரிகாரம் தரும்—'சர்வரோக சஞ்சீவி' என்று வர்ணிக்கப்படும ஐந்தாண்டுத் திட்டத்திலேயே, 'வடநாட்டின் நிலையும் பங்கும் வேறு—தென்னாட்டின் நிலையும் பங்கும் வேறு'—என்ற வேற்றுமையை — ஓர வஞ்சனையை—துணிந்து மனமார மேற்கொண்டிருக்கின்றனர்—பாரத நாட்டின் வடதிசையிலிருப்போர்!

"அன்னை பாரதமாதாவின் அணைப்பு சக்திக்கு அருகில் இருப்போர், வடநாட்டவர்தான்; நாம் அந்த அன்னையின் காலடியில்கிடப்பதால், அழுது புலம்பும் நம்மை, அணைத்துக்கொள்ள அன்னையின் கரங்களுக்கு நீளம் போதவில்லையோ?"

என்று, இங்குள்ள காங்கிரஸ்காரர்களில் நியாய உள்ளம் கொண்டவரால் எண்ணப்படுகிற நிலைதானே, தென்னாட்டைப் பொறுத்தவரை 'சுதந்திர'த்தின் பலனாக இருக்கிறது?

அன்னை பாரத மாதாவின் கரங்களிலிருந்த வெள்ளையரின் அடிமை விலங்கு ஒடிக்கப்பட்டது உண்மை; ஆனால், பாரத மாதாவின் அன்பும் பரிவும், அரவணைப்பும் ஆறுதலும் வடநாட்டு மக்களுக்கு மட்டும் கிடைத்தது என்பதும் உண்மை!

எனவே, 'சுதந்திரம்' வடநாட்டவருக்குத்தான்—அதன் முழுப் பொருளுடன் கிடைத்ததேயன்றி, தென்னாட்டவருக்கு—திராவிடருக்கு அல்ல!

கடந்த எட்டாண்டு கால நடைமுறை வரலாறு இதனை மெய்ப்பிக்கும்!

இந்த உண்மையை 'ஆனந்த சுதந்திர'தினம் கொண்டாடும் அகில இந்திய தேசீயத் தோழர்கள் சிந்தித்தாகவேண்டும்!

இரண்டாவது திட்டம்

மேற்கு வங்க முதன் மந்திரி காணும் குறைகள்

"இரண்டு முக்கிய பிரச்சினைகளில், மத்திய ஆட்சியினர் தயாரித்துள்ள இரண்டாவது அபிவிருத்தித் திட்டம், ஏற்றத் தாழ்வுகள் கொண்டதாக உள்ளது; அத்திட்டம் [illegible]குடிசைத் தொழில்களைவிட கனரகத் தொழில்களுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கிறது; கிராமப் பகுதிகளைவிட நகரப் பகுதிகளின் அபிவிருத்திக்கே அதிக திட்டம் வகுத்துள்ளது,"

என்று, மேற்கு வங்க முதன் மந்திரி டாக்டர் பி. சி. ராய் கூறியுள்ளார்.

மதுவருந்தினர்!

தனக்குத்தானே அபராதம் விதித்துக்கொண்டார்!

டார்வின் நகர போலீஸ் நிலையத்தில் ஒருவர் நுழைந்து, தான் குடித்திருப்பதாகவும், அதனால் தனக்குத் தானே 10 பவுன் அபராதம் விதித்துக்கொண்டதாகவும் கூறி, தொகையைப் போலீசாரிடம் தந்தாராம். எத்தனையோ கூறியும் கேட்காத அவர், போலீசார் நடத்தும் சிறுவர்கள் சங்கத்திற்கு தொகையைத் தந்துவிடுங்கள் என்று கூறிச் சென்றாராம்.

பிலாய் உருக்குத் தொழிற்சாலை

திட்டச் செலவு ரூ. 150 கோடியாக உயர்ந்துவிட்டது

நாகபுரி, ஆக. 14—

மத்தியப் பிரதேச மாநிலத்தில் சோவியத் ரஷ்யாவின் நிபுணர்களைக் கொண்டு துவங்கப்படுகிற பிலாய் உருக்குத் தொழிற்சாலைக்கான மதிப்பீட்டுத் தொகை, வரவர அதிகமாகிக்கொண்டே வருகிறது.

திட்டம் முடிந்து, 1958-ல் தொழிற்சாலை உற்பத்தி துவங்கப்படுகிற நேரத்தில், திட்டத்திற்கென செலவிடப்படும் தொகையின் அளவு 150 கோடி ரூபாய்க்குமதிகமாகவிருக்கும் என்று கூறப்படுகிறது.

"இந்த மாநிலத்திலேயே மிக முக்கியமான நகரமாக, பிலாய் உருக்குத் தொழிற்சாலைப் பகுதி வளரவிருக்கிறது; அங்கு சுமார் 5 லட்சம் மக்கள் வசிக்கக் கூடும்,"

என்று, ஒரு உயர்தர சர்க்கார் அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

உருக்குத் தொழிற்சாலையில் மட்டும் 50,000 பேருக்கு வேலை கிடைக்குமாம். அதை ஒட்டிய சிறு சிறு தொழில்களில், எண்ணற்றோர் வேலை பெற முடியும் என்றும் கூறப்படுகிறது.

அடுத்த ஏப்ரல் திங்களில் சுமார் 58,000 பேர், திட்டத்தை செயல்படுத்தும் வேலையில் ஈடுபடத் துவங்கி விடுவராம்.

திட்ட வேலையில் சுமார் 500 நிபுணர்கள் ஈடுபடுவராம். இவர்களில் 300 பேர்கள் ரஷ்யாவையும், 200 பேர்கள் இந்தியாவையும் சேர்ந்தவர்களாயிருப்பார்களாம்.

இந்த நிபுணர்களுக்கும், இதர தொழிலாளர்களுக்கும் வீடு கட்டித் தரும் வேலைக்கே முதலிடம் தரப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இந்தப் பகுதிக்கு தண்ணீர் வசதி செய்வதுதான் உடனடிப் பிரச்சினையாகக் கவனிக்கப்படுகிறதாம்.

திட்டப் பகுதிக்குப் போதுமான தண்ணீர் வசதி செய்யும் நோக்குடன், ஷியானாத் நதியின்மீது சுமார் ரூ 11 லட்சம் செலவில் அணைக்கட்டு ஒன்று கட்டப்படும் என்றும் சர்க்கார் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

தினம் ஒன்றுக்கு சுமார் 20 லட்சம் காலன் தண்ணீர் தேவைப்படுமாம்.

உற்பத்தி துவங்கும் வரையில் திட்டத்திற்கென தினந்தோறும் ரூ. 20 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

அமைக்கப்படும் இந்த உருக்குத் தொழிற்சாலையை, ஆண்டு தோறும் — பரம்பரைதோறும் நிர்வகிக்க ஆட்களைத் தயார் செய்வதற்கென, ரெய்பூரில் ஒரு எஞ்சினீயரிங் தொழில் நுட்பப் பயிற்சிக்கூடம் ஒன்றை நிறுவவும் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

ஏழைகளுக்கு நிலம்...!

கலெக்டரின் வேலை பளுவைக் குறைக்க சில மாற்றங்கள்

நிலமற்ற ஏழைகளுக்குத் துரிதமாக நிலம் விநியோகம் செய்யவும், அது சம்பந்தமாகக் கலெக்டரின் வேலைப் பளுவைக் குறைக்கவும் சென்னை சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது

குறைந்த மதிப்புள்ள நிலங்களை விநியோகம் செய்யும் அதிகாரத்தை சில வரையறைகளுக்குட்பட்டு கலெக்டரிடமிருந்து தாசில்தார்களுக்கு சர்க்கார் மாற்றியிருக்கிறது. இதேபோல் அதிக மதிப்புள்ள நிலங்களை விநியோகம் செய்யும் அதிகாரம் ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகளுக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மனுதாரரும், தம்மிடம் உள்ள நிலத்தின் அளவு பற்றிக் கொடுக்கும் அறிக்கை பொய்யானது என்று தெரிந்தால், நில விநியோகம் உடனடியாக ரத்துச் செய்யப்படும் என எச்சரிக்கப்படுவார்.

ஏக்கருக்கு ரூ. 200-ம், அதற்கு மேலும் மதிப்புள்ள புன்செய் நிலங்களை மாத்திரம் 'அதிக மதிப்புள்ள' நிலங்களின் பிரிவில் சேர்த்தால் போதும் என்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது.

குடி உரிமை மனுக்கள் நிராகரிப்பு?

நிலைமையைத் தெளிவாக்கும் புள்ளி விவரங்கள்

"1955 ஜூன் மாதத்தில், இந்திய வம்சா வழியுள்ள 206 பேர் இலங்கைக் குடி உரிமையைப் பெற்றார்கள். ஆனால், குடி உரிமை மனுக்கள் நிராகரிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 5669" என்று குடி உரிமைப் பதிவுக் கணக்கு காட்டுகிறது. ஆட்சேபணை கிளப்பப்பட்ட 114 மனுக்கள் அதிகாரிகள் பரிசீலனையில் இருக்கின்றன.

ஜூன் மாதத்தில், குடி உரிமை பெற்றவர்களோடு சேர்த்து இது வரை மொத்தம் 33,795 பேர் குடி உரிமை பெற்றுள்ளனர். மனுக்கள் நிராகரிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,49,138. மொத்தம் 8 இலட்சம் பேர் இலங்கை குடி உரிமைக்கு மனுச் செய்துகொண்டுள்ளனர்.

தடை இல்லையாம்!

'மத்திய ஆட்சியின் இலாகாக்களில் குமாஸ்தா வேலைக்கு 'திக்குவாய்க்காரா'களை நியமிக்கலாம்' என்று வைத்திய பரிசோதனை செய்யும் டாக்டர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளதாம்.

'ஆனால், மக்களுடன் நேருக்கு நேராகப் பேசவேண்டியிருக்கும் பதவிகளுக்கு திக்குவாய்க்காரர்களை நியமிப்பது உசிதமாக இருக்காது,' என்று இரயில்வேக்களுக்கு இரயில்வே போர்டு யோசனை கூறியுள்ளதாம்!

தி. த. நா. காங்கிரஸ்-பனம்பள்ளி ஒப்பந்தம் நிறைவேறுகிறது?

வழக்குகள் திரும்பப் பெறப்படுகின்றன

திருவனந்தபுரம், ஆக. 15—

சென்ற ஆண்டில் நடைபெற்ற திரு—தமிழக விடுதலைப் போரில் ஈடுபட்ட தி. த. நா. கா.-வினர் மீதுள்ள எல்லா வழக்குகளையும் திரும்பப் பெற்றுக்கொண்டுள்ளதாக திரு—கொச்சி மாநில சர்க்கார் தெரிவித்திருக்கிறது.

தி. த. நா. காங்கிரசைச் சேர்ந்த சுமார் 500 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளன என்றும், இந்திய சுதந்திர தினத்தையொட்டி அவர்கள் மீதுள்ள வழக்குகளனைத்தையும் ரத்து செய்துவிட்டதாகவும், மாநில முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்தமேனன் தெரிவித்திருக்கிறார். தமிழருக்கும்—அப்பகுதியில் வாழும் மலையாள மொழி பேசும் மக்களுக்குமிடையே நல்லுறவும், ஒருவருக்கொருவர் நன்றாகப் புரிந்து கொள்ளக்கூடிய வசதியையும் அளிக்கும் என்ற எண்ணத்துடனேயே தி. த. நா. கா.-வினர் மீதுள்ள வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன என்று கூறப்பட்டிருக்கிறது.

சர்க்கார் தங்கள் மீதுள்ள வழக்குகளை திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளது குறித்து, தி. த. நா. கா. தலைவரான நேசமணி எம். பி, சர்க்கார் மிக்க அறிவுத் திறனுடன் ஒரு முடிவுக்கு வந்ததற்காக அவர்களைப் பாராட்டுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

மைசூர் உயர்நீதி மன்றத்தில் விசாரணையிலிருந்து வந்த 11-வழக்குகளும், ரத்து செய்யப்பட்ட வழக்குகளுள் அடங்குமாம். அத்துடன், அந்தந்த இடங்களிலுள்ள சிறிய நீதி மன்றங்களிலும் இருந்து வரும் வழக்குகளும் வாபஸ் பெறப்பட்டு விட்டனவாம்.

பட்டம் கண்டிக்கிறார்

தி. த. நா. கா.-வினர் மீதுள்ள வழக்குகளை திரு. கொச்சி சர்க்கார் திரும்பப் பெற்றுக் கொண்டதை முன்னாள் அமைச்சரான பட்டம் தாணு கண்டித்துள்ளார்.

"காங்கிரஸ் கட்சி, சர்க்கார் அமைக்கும் முன்னர், அவர்கள் தி. த. நா. கா.-வினருடன் செய்து கொண்ட உடன்பாடுகளை இதன் மூலம் நிறைவேற்றிக் கொள்கிறது காங்கிரஸ் சர்க்கார் மேலும் நீடித்திருக்கவே, தி. த. நா. கா.-வினர் மீதுள்ள வழக்குகளை சர்க்கார் திரும்பப் பெற்றிருக்கிறது," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

உறுப்பினர்களையும் 'கனம்' ஆக்க வேண்டும்

மேற்கு வங்க முதல்வர் கருத்து

கல்கத்தா, ஆக. 11—

அமைச்சர்கள் உட்பட எல்லா சட்ட சபை உறுப்பினர்களையும் 'கனம்' என்று அழைக்கவேண்டும் என்றும், அதற்குத் தக்கபடி அவர்கள் கண்ணியத்துடன்நடந்து கொள்ளவேண்டும் என்றும் மேற்கு வங்க முதலமைச்சர் பி. சி. ராய், சட்ட சபையில் கூறியிருக்கிறார்.

பட்டப் பெயர்களைக் கைவிடும் படி இந்திய சர்க்கார் முடிவு செய்ததைக் குறிப்பிட்டே இப்பிரச்சினை சபையில் எழுந்ததென்றும், அது பற்றி நடைபெற்ற விவாதத்தில் இந்திய சர்க்காரின் மேற்படி உத்தரவினின்றும் உயர் நீதிமன்றங்களுக்கும், சட்ட சபைகளுக்கும் விலக்கு செய்யப்பட்டிருப்பதாகவும் எனவே, சட்ட சபைக்குள், சபை உறுப்பினர்களை 'கனம் உறுப்பினர்' என்றே அழைக்கலாம் என்றும் சபைத் தலைவர் தீர்ப்புக் கூறினாராம்.

'கிராம விதைப் பண்ணை திட்டம்'

சென்னை, ஆக. 14—

நடப்பு ஆண்டில், மாநிலம் முழுவதிலுமுள்ள 20,000 கிராமங்களுக்கு, 'கிராம விதைப் பண்ணைத் திட்டம்' விரிவுபடுத்தப்படுமாம்.

இத்திட்டம் தற்போது மாநிலத்தில் 6,500 கிராமங்களில் மட்டுமே அமுல் செய்யப்பட்டுவருவதாகவும், 'திருந்திய விதை'கள் சம்பந்தமாக ஒவ்வொரு கிராமமும் 'சுயநிறைவு' பெறவேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாம்.

மாவட்டக் கழகங்களுக்குச்

சர்க்கார் மானியம்

சென்னை, ஆக. 14—

நில வரி உபரி சர்சார்ஜ் வசூலாவதற்கு, அவகாசம் ஆகும் என்பதால், சென்னை சர்க்கார், இப்போதே மாவட்டக் கழகங்கள் அனைத்துக்கும் ரூ. 10 லட்சம் மானியம் அளிக்க முடிவு செய்து உத்தரவிட்டிருக்கின்றனர். இத்தொகைகள் அனைத்தும் சாதாரணச் செலவுகளுக்கு—குறிப்பாக சாலைகள் பராமரிப்புக்குப் பயன்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

மேற்படி மானியத் தொகை ரூ 10 லட்சமும் கீழ்க்கண்டவாறு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதாம்:—

வட ஆற்காடு: ரூ 83,300; தென் ஆற்காடு: ரூ 80,900; செங்கற்பட்டு: ரூ. 54,000; கோயம்புத்தூர்: ரூ. 96,000; தென் கன்னடம்: ரூ. 50,800; மதுரை: ரூ 84,300; மலபார்: ரூ. 1,38,700; நீலகிரி: ரூ. 9,100; இராமநாதபுரம்: ரூ. 60,600; சேலம்: ரூ 98,300; தஞ்சாவூர்: ரூ. 86,900; திருச்சி: ரூ: 85,500; திருநெல்வேலி: ரூ. 71,300.

தேவைக்கு அதிகமாக வாங்கமாட்டார்கள்?

இந்தியாவின் தேவைக்கு அதிகமாகப் பர்மா அரிசியை இந்தியா வாங்காது என்று மத்திய உணவு அமைச்சர் மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

இந்தியா இதுவரையிலும் வெளி நாடுகளுக்கு—குறிப்பாக பிரான்ஸ், ஜெர்மனி, சுவீடன், இங்கிலாந்து, சவூதி அரேபியா, டென்மார்க், ஜப்பான், கானடா, ஏடன் ஆகியவற்றிற்கு 16,000 டன் அரிசி ஏற்றுமதி செய்துள்ளதென்றும், இந்தியாவின் தேவையான அரிசியில், ஒரு மணிஅரிசி கூட வெளி இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படாது என்றும், மத்திய உணவு உதவி அமைச்சர் எம். வி. கிருஷ்ணப்பா கூறியிருக்கிறார்.

மேலும் அரிசி ஏற்றுமதியின் நிலை குறித்து, அடுத்த மாதத்தில் சர்க்கார் பூரணமாகப் பரிசீலனை செய்ய இருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

முன்னாள் மன்னர் பரூக்

மான நஷ்ட வழக்கு தொடருகிறார்

எகிப்தின் முன்னாள் மந்திரி பரூக், தனது வாழ்க்கை பற்றி புத்தகம் எழுதிய மாக்ஸ்வெல் என்ற அம்மையார் மீது, தனது கௌரவத்திற்கு இழுக்குத் தேடும் வகையில் அந்த அம்மையார் எழுதியதாகக் குற்றஞ்சாட்டி 50 இலட்சம் பிராங்க்குகள் (சுமார் 5,000 பவுன்) நஷ்டஈடு கோரி, மானநஷ்ட வழக்கு தொடர்ந்திருக்கிறாராம்.

ஸ்பெயின் நாட்டு மன்னராயிருந்த அல்பான்சோ என்ற மன்னருடன் பரூக்கை ஒப்பிட்டு, அந்த அம்மையார், பரூக்கை தாழ்வுபடுத்தி எழுதியிருந்தாராம்.

"ஸ்பெயின் மன்னரான அல்பான்சோ பிறப்பிலேயே ஒரு கண்ணியவான்; கனவான்; எகிப்தின் முன்னாள் மன்னரான பரூக், அப்படி ஒருபோதும் கூறப்பட முடியாது," என்று, திருமதி மாக்ஸ்வெல் எழுதியிருந்தாராம்.

இரும்பு—உருக்கு ஏற்றுமதி வரி ரத்து

ரூ. 4 லட்சம் நஷ்டம் ஏற்படும்

இரும்பு—உருக்கு ஆகியவை சம்பந்தப்பட்ட எல்லா பொருட்களின் மீதும் இதுவரை இருந்துவந்த ஏற்றுமதி வரியை ரத்து செய்து விட்டதாக இந்திய சர்க்கார் அறிவித்திருக்கின்றனர்.

சென்ற திங்களில் பாகிஸ்தான் ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டதையொட்டியே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது.

மேலும், இரும்பு உருக்குப் பொருட்கள் மீது இருந்துவந்த ஏற்றுமதி வரி ரத்து செய்துவிட்டதின் விளைவாக, இந்திய சர்க்காருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 4 லட்சம் வருமான நஷ்டம் ஏற்படுமாம்.

ஆண்டு தோறும், இந்தியா, ரூ. இலட்சம்பெறுமான இரும்பு—உருக்குப் பொருட்களை ஏற்றுமதி செய்து வருவது குறிப்பிடத் தக்கது.

உங்கள் குறிப்புக்கு!

சிதம்பரத்தில் நடைபெற்ற மகா கும்பாபிஷேக விழாவையொட்டி, தென் பகுதி இரயில்வேயில் சென்ற ஜூலைத் திங்கள் 4-ந்தேதி முதல் 11-ந் தேதி முடிய 71 விசேட இரயில் வண்டிகள் விடப்பட்டனவாம்; அதிலும் குறிப்பாக, ஜூலை 7-ந் தேதி வரையிலும் 19 விசேட இரயில்கள் விடப்பட்டனவாம்.

அதுபோது விசேட இரயில்வே கால அட்டவணையும் அச்சிடப்பெற்று வழங்கப்பெற்றது. மொத்தம் அச்சிடப்பெற்ற 950 பிரதிகளுக்கு—அச்சடிக்கவும், விளம்பரச் செலவுக்குமாக மொத்தம் ரூ. 128 செலவாயிற்று.

தொழிலாளர்களுக்கு மூன்று மாத போனஸ்

திருநெல்வேலிக்குச் சுமார் 8 கல் தொலைவில் உள்ள தாழையூத்து என்னுமிடத்தில் உள்ள இந்தியா சிமெண்ட் கம்பெனியார், அத்தொழிற்சாலையில் பணியாற்றும் சுமார் 800 தொழிலாளர்களுக்கு 3 மாத போனசாக மொத்தம் ரூ. 1½ லட்சம் கொடுத்துள்ளனர் என்று தெரியவருகிறது.

குடியிருப்புவசதி கிடைக்குமாமே!

மாநிலங்களிலுள்ள போலீஸ் படையினருக்குப் போதிய குடியிருப்பு வசதி தருவது பற்றி, உள்நாட்டு மந்திரிகளின் மாநாட்டில் விவாதிக்கப்பட்டதாம்; அது சம்பந்தமாக மாநில சர்க்கார்களின் அபிப்பிராயங்கள் கோரப்பட்டுள்ளதாம்.

செய்திச் சுருள்

★

அழகிரி நினைவு மன்றம் துவக்க விழா

3—7—55 மாலை 6 மணிக்கு, சென்னை 31-வது வட்டத்தைச் சேர்ந்த மேற்படி மன்றத் துவக்க விழாவையொட்டி, தோழர் வி. இளஞ்சேரலாதன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் இளம்பரிதி, ஆர். எஸ் பாண்டியன், அலிசேக் மன்சூர் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின்னர், தோழர் க. அன்பழகன் அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினர். கூட்ட இறுதியில் மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 11—0—9 அளிக்கப்பட்டது.

* * *

7—8—55 காலை 10 மணியளவில், மேற்படி மன்றப் பணிமனையில், தோழர் ஆர். வில்லவன் கோதை தலைமையில் நடைபெற்ற சொற் பயிற்சிக் கூட்டத்தில் 'விஞ்ஞானத்தின் அவசியம்' எனும் பொருள் குறித்து, தோழர்கள் கருமுகில், த. மணி, இரா. சேரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வட சென்னை தாளமுத்து—நடராசன் முன்னேற்ற மன்றம்

7—8—55 காலை 8 மணிக்கு, தோழர் எம்கே. சாமி தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், வருகிற செப்டம்பர் திங்கள் 15-ந் தேதிக்குள் மன்ற முதல் ஆண்டுவிழாப் பொதுக் கூட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

தூத்துக்குடி மஜீத் மன்றம்

7—8—55 காலை 10 மணிக்கு, மன்ற உறுப்பினர்கள் கூட்டம் தோழர் சு தஸ்தகீர் தலைமையில் நடைபெற்றபோது, ஆகஸ்டு 21-ந் தேதி தூத்துக்குடிக்கு வருகை தரும் அண்ணா அவர்களை மன்றச் சார்பில் வரவேற்க முடிவு செய்யப்பட்டு, முக்கிய தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

மதுரை—மணிநகரம் தியாகராயர் படிப்பகம்

10—8—55 காலை 11 மணிக்கு, தோழர் வி. எஸ் சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற மடிப்பக உறுப்பினர் அவசர கூட்டத்தில், தெருவின் சுகாதார நிலைமை குறித்து நகர சபையினருக்கு இரு வேண்டுகோள் அனுப்புவதெனவும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கோவை எழுச்சி மன்றம்

8—8—55 மாலை 6 மணி அளவில், மன்றச் சார்பில், ம. ந. க வீதியில், தோழர் எஸ். கே மருதாசலம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் டி. கே. சீனிவாசன், எஸ். எ. ராசமாணிக்கம், புலவர் தண்டபாணி ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

கூட்டத்தில், 23-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர் தோழர் கிருட்டிணன் அவர்கள் பெண் குழந்தைக்குத் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்களால் 'வெண்ணிலா மணி' என்று பெயரிடப்பட்டதின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

காங்கயம் அழகிரிபடிப்பகம் அமைப்பு

7—8—55 இரவு 8 மணிக்கு, தோழர் தணிகாசலம் அவர்களது அறையில் அழகிரி படிப்பக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. துவக்க விழாவை விரைவில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. பின்னர் படிப்பக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காஞ்சிபுரம் தாலுகா விவசாயிகள் சங்கம்

காஞ்சிபுரம் தாலுகா விவசாயிகள் மகா சபைக் கூட்டம் புளியம்பாக்கத்தில் 7—8—55ல், தோழர் எஸ். பி. ஆதித்தன் தலைமையில் நடைபெற்றபோது, காஞ்சிபுரம் தாலுகா விவசய சங்கம் அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— தலைவர்: காஞ்சி சி. முனுசாமி; துணைத் தலைவர்: வாசுதேவன்; செயலாளர்: டி. தேவசகாயம்; துணைச் செயலாளர்: டி. என். கண்ணன்; பொருளாளர்: எம். பி. இராதாகிருஷ்ணன். மற்றும் 17 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பம்பாய் தே. இ. ஆதிதிராவிட மகாஜன சங்கம்

7—8—55 இரவு 7½ மணிக்கு, மேற்படி சங்கத்தின் பதினைந்தாம் ஆண்டு பேரவைக் கூட்டம், தாராவியில், திரு. ஒ. த. அய்யாசாமி தலைமையில் நடைபெற்றபோது, ஆண்டறிக்கையும், வரவு—செலவு கணக்குகளும், இருப்புப் பொருள் பட்டியல்களும் ஒப்புக்கொள்ளப்பட்டபின், நடப்பு ஆண்டிற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிறப்பு

சென்னை—வண்ணை தோழர் கே. எஸ். அருணாசலம் அவர்களது துணைவியார் லட்சுமி அம்மையார் அவர்கள் 4—8—55ல், ஓர் பெண் மகவுக்குத் தாயானார்; தாயும் சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

தாரை வட்ட தி. மு. கழகப் பொருளாளர் தோழர் கே. எஸ். சீரங்கராயர் அவர்கள் குமாரர் தோழர் கே. எஸ் பெரியசாமி அவர்கள் துணைவியார், 6—8—55 அன்று ஒரு ஆண் மகவுக்குத் தாயானார்; தாயும் சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது — வரப்பெற்றோம்— நன்றி—பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

சென்னை 3-வது வட்ட தி. மு கழக உறுப்பினர் தோழர் எஸ். சின்னமணி அவர்களின் துணைவியார், 14—7—55ல், ஓர் ஆண் மகவுக்குத் தாயானார்; குழந்தைக்கு 'இராசேந்திரன்' என்று பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடையளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

* * *

28—7—55ல், கெரூர் தோழர் சுப்பு அவர்களின் ஆண் மகவுக்கு தோழர் வை. இரத்தினவேலு அவர்களால் 'இளங்கோவன்' எனப் பெயரிடப்பட்டது; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி பொறுப்பாளர்.

நன்றியறிவிப்பு

7—8—55ல் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பக 2-ம் ஆண்டு விழாவிற்கு ஒத்துழைப்பு தந்த இயக்கத் தோழர்களுக்கும், படிப்பக உறுப்பினர்களுக்கும், மாநில மாநாட்டுக்கு நிதி உதவி செய்த பொதுமக்களுக்கும் படிப்பகச் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஃ ஃ ஃ

திருச்சி மாவட்ட தி. மு கழகப் பொதுக்குழு உறுப்பினராகத் தம்மைத் தேர்ந்தெடுத்த தற்காக, மாவட்டக் கழகச் செயலாளரையும் செயற்குழு உறுப்பினர்களையும் பாராட்டி நன்றி தெரிவித்துள்ளார். குளித்தலை தோழர் தி. வீ. முத்துகிருஷ்ணன்.

வள்ளுவர் விழா

சென்னை 39-வது வட்டம்

7—8—55 காலை 10 மணிக்கு, சென்னை 39-வது வட்ட தி. மு. கிளைக் கழகத்தில், தோழர் கா. மு. செங்கழனி தலைமையில் வள்ளுவர் திருநாள் விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை 46-வது வட்டம்

29—7—55 மாலை 6 மணியளவில், சென்னை 46-வது வட்ட தி. மு. கழகப் பணிமனை முன், திருவள்ளுவர் திருநாள் விழா தோழர் வில்லவன் கோதை தலைமையில் நடைபெற்றது. தோழர் இரா. அசமழகன், இராம-வேள்ளையன், வ. சங்கரநாராயணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பெங்களூர் இலக்குமணபுரி

1—8—55-ல், பெங்களூர் இலக்குமணபுரி தி. மு. கழக இல்லத்தில், தோழர் சி. எஸ். அண்ணியப்பன் தலைமையில் வள்ளுவர் தின விழா நடைபெற்றது. தோழர்கள் மு அரங்கசாமி, ஆர். முனுசாமி, மற்றும் பல தோழர்களும் சொற்பொழிவாற்றினர்.

பொன்மலை

28—7—55 மாலை 6 மணிக்கு, பொன்மலை தோழர் அரங்கத்தரசு இல்லத்தில் பொன்மலை திருக்குறள் கழகச் சார்பில் திருக்குறள் வார விழா கொண்டாடப்பட்டது. தோழர் த. மா. திருநாவுக்கரசு அவர்கள், திருக்குறளின் பிறப்பினையும், வார விழாவினை ஜூலை இறுதி வாரத்தில் கொண்டாடுவதின் அவசியம் பற்றியும் விளக்கினார்.

* * *

31—7—55 காலை 10 மணிக்கு, மேற்படி கழகச் சார்பில், தோழர் அரங்கத்தரசு இல்லத்தில் திருவள்ளுவர் நினைவு விழா கொண்டாடப்பட்டது, தோழர் க. அன்பழகன் குறளின் பெருமை பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

வேலூர் மருத்துவகல்லூரிக்கு அமெரிக்க நன்கொடை

புதுடில்லியில் மருத்து ஆராய்ச்சிக் கழகக் கட்டிடம் அமைக்க, அமெரிக்காவிலுள்ள 'ராக்பெல்டர்' நிதி நிறுவனம் ரூ. 2,25,000 கொடுக்குமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், டில்லியில் பல்கலைக் கழகத்தில் இந்திய சரித்திர ஆராய்ச்சிக்காகவும் அந்நிறுவனம் ரூ. 90,000 வழங்க இருக்கிறதாம்.

இது தவிர, சென்னை மாநிலத்தில், வேலூரிலுள்ள கிறித்துவ மருத்துவக் கல்லூரிக்கு, இரண சிகிச்சைக்குத் தேவையான சாதனங்கள் வாங்கவும் ரூ. 38,080 தரப்படுமோம்.

கூட்டத்தைக் குறைக்க குழு ஒன்று ஆராயும்

புதுடில்லி, ஆக. 12—

சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகர்ப்புற இரயில்வேக்களில் எப்போதும் மக்கள் கூட்டம் அதிகமாக இருப்பதை ஆராய்ந்து அதனைக் குறைப்பதற்கான பரிகாரம் தேடிக்கூற விரைவில் ஒரு குழு நியமிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திருமணம்

29-7-55ல், முத்துப்பேட்டை—வீரன்வயல் கிராமத்தில், தோழர் கணேசன்—தோழியர் ரெத்தினம்மாள் திருமணம் தோழர் க. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றது, தோழர் வீ. நடேசன் 'திருமணம்' என்ற தலைப்பில் பேசினார்; இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றி-பொறுப்பாளர்.

உரிமை முழக்கம் கேட்டு வடவர் கலக்கம்

திராவிடர்களுக்கு எக்காரணத்தாலும் சுதந்திரம் தரமாட்டார்களாம்!

இந்தியா என்றென்றைக்கும் 'ஏக இந்தியா'வாகவே இருக்குமாம்!

ஜனாதிபதி இராசேந்திரர் பகற் கனவு

"வெள்ளையர்களைப் போல நாமும் நாட்டுப்பற்றை வளர்த்துக்கொண்டால், 'இந்தியா துண்டாடப்படக் கூடாது—'ஏக இந்தியா'வாகவே இருக்க வேண்டும்,' என்று, மக்கள் எண்ண முடியும்."

"என்னதான் நடைபெற்றாலுங்கூட, இந்தியா ஒன்றுகத்தான்—பிரிக்கப்படாமல்—துண்டாடப்படாமல் இருக்கப்போகிறது,"

என்று, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத், கர்னூலில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டு விட்டு, மேலும் சொன்னார் :—

"தென்னாட்டு மக்களிடையே நம்பிக்கை உணர்வு ஊட்டச் செய்வதற்காக நான், தென்னாட்டில், ஆண்டொன்றுக்கு ஆறு வாரங்கள் அல்லது இரண்டு மாதகாலம் தங்குவதற்கு உத்தேசித்திருக்கிறேன் ;

"நாம் ஓராண்டில் இரண்டு தேசிய தினங்கள் கொண்டாடுகிறோம்—ஒன்று, ஜனவரி 26 ; மற்றொன்று, ஆகஸ்டு 15. ஜனாதிபதி என்ற முறையில் ஒரு தினத்தை டில்லியிலும், மற்றொரு தினத்தை தென்னாட்டில் எங்கேனும் கொண்டாட முடிவு செய்திருக்கிறேன்; அந்த முடிவின் விளைவாகத்தான் சென்ற ஆண்டு சுதந்திர தினத்தை பெங்களூரில் கொண்டாடினேன்; இந்த ஆண்டு சுதந்திர தினத்தை, ஆந்திரத் தலைநகரான கர்னூலில் கொண்டாடுகிறேன்.

"மேலும், ஜனாதிபதிக்கென தென்னாட்டில் ஒரு நிரந்தரமான 'வாசஸ்தலம்' ஏற்படுத்திக்கொள்ளவும் நான் முடிவு செய்திருப்பதை நீங்கள் எல்லாரும் பாராட்டுவீர்கள் என்று நம்புகிறேன் ;

"இன்று காலை நான் ஐதராபாத்தில் தங்கியிருந்த இரண்டு மணி நேரத்திற்குள்ளாக, அங்குள்ள இல்லத்தை, ஜனாதிபதியின் இல்லமென பிரகடனப்படுத்தியிருக்கிறேன் ; அந்த இல்லத்திற்கு ஒரு தகுந்த பெயர்சூட்ட ஆவல் கொண்டேன்; பல நண்பர்களைக் கலந்தாலோசித்தேன்; நான் கலந்து பேசிய நண்பர்களில் பலருக்கு 'ராஷ்டிரபதி நிலயம்' என்ற பெயர் மிகவும் பிடித்திருந்தது ;

'நிலயம்' என்ற சொல், இந்த தென்னாட்டின் எல்லா பகுதியினராலும், நான்கு மொழி பேசும் மக்களாலும் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்று என்று கூறக் கேட்டேன் ; எனவே, தென்னாட்டின் நலன்கள் ஒரு போதும் அலட்சியப்படுத்தப் பட மாட்டாது என்று நீங்கள் உறுதியாக நம்பலாம்.

இப்போது இல்லை !—
இனிமேல் வளர வேண்டுமாம்

"நாம் எல்லோரும் இந்தியர்கள் என்று எண்ணும் மனப்போக்கை வளர்த்துக்கொள்ள உறுதி பூண வேண்டும் ; நாம் எல்லோரும், ஒன்றாகவே வாழ வேண்டும்—ஒன்றாகவே சாக வேண்டும் ;

"நம்மிடையே வேறுபாடுகளை உண்டாக்கக்கூடியதும், நம்மைப் பிரித்து வைக்கக்கூடியதுமான செயல்கள் எதுவுமே நிகழக் கூடாது ;

"நாம் இன்னும் நாடு முழுமைக்குமான—முழு நாட்டுப் பற்றுக் கொள்ளும் உணர்வைப் பெறவில்லை; அந்த உணர்வை இனி வளர்த்துக்கொண்டாக வேண்டும் ;

"நாம் எதிர்காலத்தில் மிக எச்சரிக்கையுடனிருக்க வேண்டும் ;

"இன்னும் நாட்டில் உள்ள கஷ்டங்கள் பல தீர்க்கப்படவில்லை என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது ;

"பெரும் முயற்சிக்கும், தியாகத்திற்கும் பிறகு, நாம் சுதந்திரம் பெற்றிருக்கிறோம்; எனவே அந்த சுதந்திரத்தை பாதுகாத்து நிலைக்கச் செய்ய வேண்டுவது மிக அவசியம்.

'நாட்டில், ஆண்களும் - பெண்களும், 'தங்களுக்குத் தாங்களே' என்பது மட்டுமின்றி, நாட்டுக்கும் கடமைப்பட்டிருக்கிறார்கள்; நாட்டு சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவர்களது கடமையாகும்.

"நாட்டுச் சுதந்திரத்திற்காக அவர்கள் தினந்தினம் போராட வேண்டுமென்பதல்ல ; ஆனால், சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு உள்ள சிறந்த வழி, சுதந்திரத்திற்கு ஆக்கந்தேடுகிற காரியங்களைச் செய்வதே; கடந்த காலத்தின் இன்னல்களை விளைவித்த எல்லாவற்றையும் நாம் மறந்துவிட வேண்டும்."

கிராமங்கள் பொலிவுடன் விளங்குகின்றனவாம் !

மக்கள் வாழ்வு மலர்ந்திருக்கிறதாம்!

வானொலி மூலம் காமராசர் கூறுகிறார்

சென்னை, ஆக. 16—

சுதந்திர தினக் கொண்டாட்டத்தை ஒட்டி, 15-ந் தேதி இரவு அகில இந்திய வானொலியின் சென்னை நிலையத்திலிருந்து முதலமைச்சர் காமராசர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இனிய சுதந்திரம் பெற்று எட்டு ஆண்டுகள் சென்று விட்டன ; அன்னியன் நம்மை ஆளக் கூடாது என்பது மட்டுமல்ல, சுதந்திரத்தின் தத்துவம் ; 'நம்மை நாமே ஆள வேண்டும்' என்பது தான் அதன் அடிப்படை ; இந்திய ஜனநாயக சுதந்திரக் குடியரசை ஆக்குவதும், ஆள்வதும் நம் அனைவருக்கும் உற்ற உரிமையும், உரிய கடமையும் ஆகும். சுதந்திர இந்தியாவின் சென்ற எட்டாண்டு வரலாற்றை எடுத்துப் பாருங்கள்—சுதந்திரத்தின் பொறுப்புக்களையும், நன்மைகளையும், தனி மனிதன் ஒவ்வொருவனும் உணரச் செய்துள்ளோம் ; மக்களாட்சியின் சிறந்த சாதனை இதுவே ! அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் இடையே இருந்த மதில் இடிந்துவிட்டது ; இன்று ஆள்பவரும் நாமே—ஆளப்படுவோரும் நாமே !

"அறம் செழித்து, வளம் கொழித்த நாடு, நம் நாடு. அந்த அறத்தைப் போற்றி வளர்த்து, நாம் மட்டுமல்ல—உலக மக்களும் அதைப் பின்பற்றிப் பயனடையச் செய்யும் வகையில், நம் அயல் நாட்டுக் கொள்கை அமைந்துள்ளது ; வளத்தைப் பேணி வளர்க்கும் முறையில், வகுக்கப்பட்டுள்ளது ஐந்தாண்டுத் திட்டம் ; மக்கள் உழைப்புக்கு உற்சாகம் ஊட்டி, உணர்வை உறுதிபடுத்தி, அவர்கள் ஆக்கல் சக்தி அனைத்தையும் திரட்டி, நாட்டு நன்மைக்குப் பயன்படுத்த ஐந்தாண்டுத் திட்டம் வழி காட்டியுள்ளது.

'திட்டம் தீட்டிவிட்டால், பசி அடங்கிவிடுமா ?'—என்று கேட்பவர்கள், இன்று புத்துணர்வு பொங்க, பொலிவுற்று விளங்கும் நம் கிராமங்களுக்குச் சென்று பார்க்கட்டும் :—

"மறுமலர்ச்சி மீண்டு, மலர்ந்த வாழ்வு வாழும் மக்களை அங்கு காணலாம் ; அரசாங்கத்தின் ஆதரவுடன், கிராம முன்னேற்றத்துக்குத் தாங்களே திட்டம் வகுத்து பள்ளிகள் கட்டி, பாதைகள் போட்டு, குளம் வெட்டி, வளம் பெருக்கித் திருப்பணியில் பொறுப் பேற்கும் காட்சியைக் காணலாம் ; சாதி வேற்றுமைக்கு அப்பாற்பட்ட சமுதாயம் அங்கு உருவாகி வருகிறது ; விவசாயி வாழ்வு ஆக்கம் பெற்றுள்ளது ; வைத்திய வசதிகள், மூலை முடுக்கிலுள்ள கிராம மக்களையும் தேடி வருகின்றன ; ஏட்டுப் படிப்பு அல்லாமல், தனி மனிதன் நல்வாழ்வுக்கும், சமூகத்தின் பொது வாழ்வுக்கும் பலனளிக்கும் முறையில் சிறுவர்களைப் பக்குவப்படுத்தும் ஆதாரக் கல்விப் பள்ளிகளை அங்கு காணலாம் ; பல ஆண்டுகளாகச் சீரழிந்திருந்த குடிசைத் தொழிலுக்கு ஆதரவு பெருகி வருவதைக் காணலாம். 'நாடு ஒன்று—நாடு நமது' என்ற உணர்வு, மக்களிடை எங்கும் ஊடுருவி நிற்பதைக் காணலாம் ; அங்கு சர்வோதய சமுதாயம் நம் கண் முன்பே உருவாகி வருகிறது.

"இவை அரிய சாதனைகள் ; இவை குறித்துப் பெருமை கொள்ள நமக்கு உரிமை உண்டு; சுதந்திர இந்தியாவின் மிகப் பெரிய மூலதனச் சொத்து, அதன் மக்கள் சக்தி; அச்செல்வம் என்றும் குறையாது, குலையாது காக்க வேண்டும். அணைகள் கட்டுவது யாருக்காக ? தரிசை மீட்டு, நிலத்தைத் திருத்தி நீர் பாய்ச்சுவது யாருக்காக ? இவை பொதுப் பணிகள்; சாதிசமய வேறுபாடுகள், அரசியல் கட்சிப் பூசல்கள் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டவை ; உழைப்பில் பிறக்கும் ஒற்றுமை, வகுப்பு வர்க்கக் கட்சி வேற்றுமைகளுக்கு மேம்பட்டது

"இந்த நன்னாளன்று நான் மக்கள் அனைவருக்கும் விடுக்கும் வேண்டுகோள் இதுதான். நாம் இந்நாட்டுக் குடிகள் என்பதில் பெருமிதம் கொள்வோம்; நாடும் நம்மைப் பற்றிப் பெருமை கொள்ளும்படி நடந்துகொள்வோம்."

'காங்கிரஸ் ஜோதி'யில் கலந்துவிட்டார் !

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனத்தின் முன்னாள் பொதுச் செயலாளரும், பாராளு மன்ற உறுப்பினருமான பி. என். ராஜ்போஜ் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துவிட்டார் என்று கூறப்பட்டிருக்கிறது. அவருடன், அவரது சீடர்களான 153 பேரும் காங்கிரசில் சேர்ந்துவிட்டனர் என்று மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

பீகாரில் மேலும் இருவர் பலி

மூன்றும் முறையாக துப்பாக்கிப் பிரயோகம்

மாணவர் ஆர்ப்பாட்டம் வலுக்கிறது

பாட்னா, ஆக. 15—

கயா மாவட்டத்தில் உள்ள நாவாடா நகரில் மாநில பஸ் போக்குவரத்து நிலையத்தின் முன்னால், மாணவர்கள் பலர் கூடி ஆர்ப்பாட்டம் செய்தபோது, அவர்கள் மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக, 2 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர் ; பலர் காயம்பட்டிருக்கின்றனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் மாணவர் என்றும் கூறப்படுகிறது.

கருப்புக்கொடி ஊர்வலம் ஒன்று தாங்கள் நடத்தியதாகவும், மாநில பஸ் போக்குவரத்து நிலையத்தின் முன்கூடி தாங்கள் அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருக்கும்போது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், சம்பவம் பற்றி மாணவர்கள் விளக்கம் தருகின்றனர்.

'அனுக்ரக' பூங்காவில் காலையில் ஏற்றப்பட்ட தேசியக் கொடியை மாணவர்கள், தாழப் பறக்கவிட்டதாகவும், தபால் நிலையத்தைத் தாக்கி அழித்ததாகவும், பஸ் நிலைய சிற்றுண்டி விடுதிச்குத் தீயிட்டதாகவும், உள்ளூர் நீதிபதியின் வீட்டைத் தாக்கியதாகவும், அதிகாரி ஒருவர்மீது கற்களை வீசிக் காயப்படுத்தியதாகவும், போலீசார் தெரிவிக்கின்றனர்.

ராஞ்சியில் இருந்து வந்துள்ள செய்திப்படி, ராஜபவனத்தின் முன்கூடி மாணவர் பலர் ஆர்ப்பாட்டம் செய்ததாகவும், அங்கு ஏற்றப்பட்டிருந்த தேசியக் கொடியை பாதியளவில் பறக்கவிட வேண்டுமென, மாணவர்கள் கோரியதாகவும், இதைத் தொடர்ந்து மாணவர்களுக்கும், குதிரைப் போலீசாருக்குமிடையே ஏற்பட்ட கலவரத்தில், பலருக்குக் காயம்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கோவாவிற்குள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது ;

"நான் இதைச் சொல்வதற்குக் காரணம்,போராட்ட வீரர்களைப் பின்தொடர்ந்து நமது இராணுவம் செல்ல வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர் ; நாம் அம்மாதிரி செய்வோம் என்று எவரும் தவறாக எண்ணிக்கொண்டிருக்க வேண்டாம்,"

என்று, பண்டித நேரு, சுதந்திர தின விழாவை ஒட்டி, டெல்லி செங்கோட்டையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"போர்ச்சுகீசியர், நிராயுத பாணிகளாகச் செல்லும் கோவா விடுதலை வீரர்கள் மீது, துப்பாக்கிக் குண்டுகளை அள்ளி வீசுகின்றனர் ;

"இரண்டு படைகள், ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்ளும் போது, குண்டுகளைப் பரிமாறிக் கொள்ளுவது இயற்கை ; ஆனால், நிராயுத பாணிகளாக நிற்போர்மீது குண்டுகளை அள்ளி வீசுவது என்ன நியாயம் ?

"எவரேனும் சட்டத்தை மீறுவதாகத் தெரிந்தால், அவர்களைக் கைது செய்து சிறைப்படுத்த போர்ச்சுகீசியருக்கு உரிமை இருக்கிறது ; ஆனால், அவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வது தவறு;

"நிராயுதபாணிகள்மீது இப்படித் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதை, சர்வதேசச் சட்டம் அனுமதிக்கிறதா ?—என்பதை உலகத்தவரும், போர்ச்சுகீசியரும் எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்."

நெல்லை மாவட்டத்தில் அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

☆

17 மாலை 6 மணி: புளியங்குடி ; இரவு $8\frac{1}{2}$ மணி: கடையநல்லூர்.

18 மாலை 6 மணி: கீளப்பாவூர் ; இரவு $8\frac{1}{2}$ மணி: முக்கூடல்.

19 மாலை 6 மணி: விக்கிரமசிங்கபுரம் ; இரவு $8\frac{1}{2}$ மணி : வீரவநல்லூர்.

20 காலை 10 மணி: அம்மன்புரம் ; மாலை 6 மணி : ஆத்தூர் ; இரவு $8\frac{1}{2}$ மணி: சிவத்தயாபுரம்.

21 காலை 10 மணி: பாளையங்கோட்டை; மாலை 6 மணி: தூத்துக்குடி.

கழகக் கூட்டங்கள்

☆

கீழப்பாவூர்

பாண்டியன் மைதானத்தில்
18—8—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: கே. வி. கே. சாமி
பேசுபவர் :
சி. என். அண்ணாதுரை

☆

வங்கனூர்

கடை வீதியில்
18—8—55 மாலை 7 மணிக்கு
தலைவர் :
ஏ. எல். சி. கிருட்டினசாமி
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
என். ஏ. ரசீத்

சேலூர் (வ.ஆ.) தி. மு. கழக உறுப்பினர்கட்கு

"சேலூர் (வ ஆ.) தி. மு. கழகக் கிளையின் செயற்குழுத் தேர்தல் நடைபெறுவதற்கு வேண்டிய பொறுப்புகள் அனைத்தும் மாவட்டச் செயலாளர் தோழர் எம். பி சத்தியிடம் அளித்திருப்பதாக, தி. மு. கழக பொதுச் செயலாளரால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கழகத் தேர்தல் நடைபெறும் வரையிலும் உறுப்பினர்கள் உடனிருந்து, கழக ஆக்க வேலைகளை நடத்திச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்,"

என, சேலூர் தி. மு. கழகப் பொறுப்பாளர் தோழர் கே எம். சாரங்கபாணி அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.